இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கைநெறி மட்டம் 02 - இறுதி பரீட்சை- 2018
கணக்கியலும் நிதியியலும் அறிமுகம் - MCC 1206
காலம் – இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி: 27.10.2018 **நேரம்: 1.30 பி.ப.- 3.30 பி.ப.**

அறிவுறுத்தல்கள்

முதலாம் வினா (01) உள்ளடங்களாக மூன்று (03) வினாக்களுக்கு விடை தருக.
அனைத்து செய்கைகளையும் தெளிவாக காட்டுக. நிகழ்ச்சிப்படுத்தப்படாத கணிப்பான் பாவனை அனுமதிக்கப்படும்.

வினா இலக்கம் (01) (கட்டாய வினா)

திரு. தம்மிக சில்வா சில்லறை வியாபாரமொன்றை நடாத்துகிறார். பின்வரும் பரீட்சை மீதியானது தம்மிக டிரெடர்ஸின் 31.03.2018 அன்று பிரித்தெடுக்கப்பட்டது. (பெறுமதி ரூபாவில்.)

விபரம்	வரவு.	செலவு.
மூலதனம்		1,500,000
நிலம் - (கிரயத்தில்)	1,280,000	
மோட்டார் வாகனம் - (கிரயத்தில்)	650,000	
உபகரணம் - (கிரயத்தில்)	420,000	
திரண்ட தேய்வு ஏற்பாடு		
மோட்டார் வாகனம்		280,000
உபகரணம்		150,000
விற்பனை		1,500,000
01.04.2017ல் உள்ளபடியான இருப்பு	180,000	
கொள்வனவு	740,000	
உட்சுமை கூலி	12,000	
நிர்வாக செலவு	90,000	
சம்பளம்	190,000	
அறவிடமுடியா கடன்	4,300	
காப்புறுதி	11,500	
கடன்படுநர் மற்றும் கடன்கொடுநர்	95,000	146,000
01.04.2017ல் உள்ளபடியான ஐயக்கடனுக்கான ஏற்பாடு		12,000
பெற்ற வட்டி		10,000
அஞ்சல் கட்டணம்	16,000	
விளம்பரம்	20,000	
வங்கி கடன் -12%		250,000
வெளிச்சுமை கூலி	3,200	
விற்பனை செலவு	40,000	
வங்கிகடன் மீள் செலுத்தல்	60,000	
கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள காசு	36,000	
மொத்தம்	3,848,000	3,848,000

மேலதிக தகவல்கள்

i. 31.03.2018ல் உள்ளபடியான இறுதி இருப்பு ரூபா. 90,000/-ஆக மதிப்பிடப்பட்டது. 31.08.2018 அன்று அட்டுறு காப்புறுதி ரூபா. 8,500 மற்றும் முற்பண விளம்பரம் ரூபா. 5,000

ii. 2017/2018ஆம் ஆண்டுக்கான நிலையான சொத்து தேய்விடப்படவில்லை.

<u>தேய்வு வீதங்கள்</u>

உபகரணம் 05%

மோட்டார் வாகனம் 10%

iii. 31.03.2018ல் ஐயக் கடன் ஏற்பாடானது 10% மாக காணப்பட வேண்டும்.

iv. வங்கி கடனானது 5 வருட காலத்திற்கு 01.07.2017 அன்று சம்பத் வங்கியிடமிருந்து பெறப்பட்டது

மேற்தரப்பட்ட தகவல்களை பயன்படுத்தி தம்மிக்க டிரெடர்ஸின் 31 மார்ச் 2018ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்றை தயாரிக்குக.

(மொத்த புள்ளிகள் 40)

வினா இலக்கம் (02)

I. கணக்கீட்டில் கொடுக்கல் வாங்கல்கள் அங்கீகரிக்கப்படும் மூல ஆவணங்கள் இரண்டினை (02) பட்டியல் படுத்துக. **(02 புள்ளிகள்)**

II. முதன்மை ஏடு என்றால் என்ன? கணக்கீட்டில் காணப்படும் இரண்டு (02) முதன்மை ஏடுகளை பட்டியலிடுக. **(03 புள்ளிகள்)**

III. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீட்டு சமன்பாட்டில் பதிவிடுக.

a. காசோலை மூலம் ரூபா. 35,000/- பெறுமதியான வங்கிக் கடன் தவணைக் கட்டணம் செலுத்தப்பட்டது, அதனில் ரூபா 17,500/- வட்டியாகும்.

b. உரிமையாளர் தனது சொந்த பணம் ரூபா. 10,000/-த்தினை வழங்குநருக்கு செலுத்தினார். **(02 புள்ளிகள்)**

IV. பரீட்சை மீதியின் சமமற்ற நிலைமைக்கு இட்டுச் செல்லக்கூடிய இரு நிகழ்வுகளை குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

V. பின்வரும் இரு கணக்கீட்டு வலுக்களை திருத்துவதற்கான சரியான நாளேட்டு பதிவுகளை எழுதுக.

a. கடன்கொடுநருக்கு காசோலை மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா. 25,125/- பெறுமதியான கொடுப்பனவொன்று, கடன்படுநர் கணக்கில் செலவு வைக்கப்பட்டது.

b. பெற்ற வட்டி ரூபா. 10,000/- கொடுத்த வட்டியாக இனங்காணப்பட்டுள்ளது. **(04 புள்ளிகள்)**

VI. கணக்கீட்டில் சொத்தொன்றிலிருந்து பொறுப்பொன்றை எவ்வாறு வேறுபடுத்துவீர்கள்? **(04 புள்ளிகள்)**

VII. பின்வரும் கணக்குகள் ஓர் வணிகத்தின் பரீட்சை மீதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

i.	வங்கிக் கடன்	x	கடன் வட்டி

ii.	கட்டடங்கள்	vi	அறவிடமுடியா கடன்
iii.	விற்பனைகள்	vii	இயந்திரம் மற்றும் உபகரணம்
iv.	உரிமையாளரின் மூலதனம்	viii	வியாபார கடன்கொடுநர்
v.	சம்பள கொடுப்பனவு	ix	பெற்றவட்டி

பின்வருவனவற்றை கணிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்:

i. மேற்தரப்பட்ட கணக்குகளை சொத்து, பொறுப்பு, உரிமை, வருமானம் மற்றும் செலவு என வகைப்படுத்துக. **(09 புள்ளிகள்)**

ii. எக் கணக்குகள் வருமானக்கூற்றில் மற்றும் எக் கணக்குகள் நிதி நிலைமைக் கூற்றில் பதிவிடப்படும் என காட்டுக. **(04 புள்ளிகள்)**

(மொத்த புள்ளிகள் 30)

வினா இலக்கம் (03)

தம்புலு தளபாட நிறுவனமானது, சிறிய அளவு தளபாட உற்பத்தி நிறுவனமாகும். இந் நிறுவனம் சிங்கித்தி ஆரம்ப பாடசாலையிடமிருந்து 1000 கதிரைகளை உற்பத்தி செய்ய கட்டளையொன்றை பெற்றுக் கொண்டது. பின்வருவது அக் கட்டளை தொடர்பான விபரங்களாகும்.

	பெறுமதி (ரூபாவில்.)
ஆரம்ப இருப்பு (பலகை) 01.06.2018ல் உள்ளபடியானது	33,000
கட்டளைக்குரிய செலவுகள்	
பலகை கொள்வனவு	827,000
இக் கட்டளைக்கு கணிக்கப்பட்ட வாடகை	15,000
வர்ணம் மற்றும் மேற்பூச்சு	280,000
ஊழியருக்கான சம்பளம்	148,000
மேற்பார்வையாளர் கட்டணம்	35,000
மின்சாரம்	8,500
இயந்திர பழுது பார்த்தல்	6,500
ஆணிகள் மற்றும் ஏனையவை	12,000
இக் கட்டளைக்கு கணிக்கப்பட்ட இயந்திர தேய்வு	8,000
இறுதி இருப்பு (பலகை) 31.07.2018ல் உள்ளபடியானது	45,000

நீங்கள் பின்வருவனவற்றை கணிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்:

i. முதன்மை கிரயம்
ii. மேந்தலைக் கிரயம்
iii. மொத்த கிரயம்
iv. கதிரையொன்றிற்கான அலகு கிரயம்

(மொத்த புள்ளிகள் 30)

வினா இலக்கம் (04)

I. பாதீடு என்றால் என்ன?-நிறுவனமொன்றிற்கு பாதீட்டின் ஐந்து அனுகூலங்களை குறிப்பிடுக. **(10 புள்ளிகள்)**

II. ஒரு கழிப்பறை சவர்க்கார உற்பத்தியாளர், கழிப்பறை சவர்க்காரம் அலகொன்றிற்கு விலை ரூபா. 50/-ற்கு உற்பத்தி செய்கின்றார். உற்பத்தியின் கிரயங்கள் பின்வருமாறு.

	கிரய பெறுமதி (ரூபா.)
அலகொன்றிற்கான நேர் மூலப்பொருள்	15/-
நேர் கூலி	10/-
ஏனைய நேர் செலவு	05/-
உற்பத்தியின் நிலையான செலவு	3,000,000/-
எதிர்வு கூறப்பட்ட விற்பனை அலகுகளில்	225,000

(a) அலகொன்றிற்கான பங்களிப்பை கணிக்குக. (03 புள்ளிகள்)

(b) விற்பனை பங்களிப்பு வீதத்தினை (C/S Ratio) கணிக்குக. (02 புள்ளிகள்)

(c) புதிய உற்பத்திக்கான சமப்பாட்டு புள்ளியினை (Break Even Point) அலகு மற்றும் பெறுமதியில் கணிக்குக. (04 புள்ளிகள்)

(d) பாதுகாப்பு எல்லையை (Margin of Safety) கணிக்குக. (04 புள்ளிகள்)

(e) கழிப்பறை சவர்க்காரத்தின் விலை ரூபா. 5/-னால் அதிகரித்தால், அலகுகளில் புதிய சமப்பாட்டு புள்ளி எண்ணிக்கை யாது? (03 புள்ளிகள்)

(f) குறித்த காலப்பகுதியில் இவ் உற்பத்தியிலிருந்து உற்பத்தியாளர் ரூபா 1,000,000/- இலாபத்தை அடைய எதிர்ப்பார்க்கின்றார் என கொள்வோம். பகுதி (e) இல் குறிப்பிட்டவாறு விலை அதிகரிக்கும் முன்னர், இவ் இலக்கு இலாபத்தை அடைய விற்பனை செய்யப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கை யாது?
(04 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 30)

வினா இலக்கம் (05)

பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பெழுதுக.

I. கணக்கீட்டு சமன்பாடு
II. இரட்டைநிரல் காசேடு
III. விற்பனை விலைப்பட்டியல்
IV. பரீட்சை மீதி
V. கொள்வனவு நாளேடு
VI. தொங்கல் கணக்கு

(ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)
(05*06 = 30 புள்ளிகள்)
(மொத்த புள்ளிகள் 100)

- பதிப்புரிமையுடையது -